P5

Stream

Pyimary School

Primary 5 : Semester Assessment 1

Tamil Language Paper 2

Name : ____________________

Class : 5 / ____

Date :

Marks : / 46

Booklet A

23 Questions 46 Marks

Total Time : 1 h 40 min

This booklet consists of 9 pages

DO NOT OPEN THIS BOOKLET UNTIL YOU ARE TOLD TO DO SO.

FOLLOW ALL INSTRUCTIONS CAREFULLY.

ANSWER ALL THE QUESTIONS.

Parent's Signature : ____________________

Date : ____________________

150

www.testpapersfree.com

P5 SA1 தாள் - 5

Name : ____________

Class : Primary ____________

Date : ____________

கட்டுரை

## தொலைந்து போன சிறுவன்



பேரங்காடி
மலிவு விற்பனை
ஒரே கூட்டமாக
தாயாருடன்
ஐஸ்கிரீம்
விரும்பினான்
பணமில்லை
தேடினான்
காணவில்லை
அச்சமடைந்தான்
கதறினான்
காவலரிடம்
நடந்ததை

5

P5/SA1/தாள் 5

www.testpapersfree.com

P5 SA1 தாள் - 5

| |
|---|
| 1 முதல் 32 வரையுள்ள வினாக்களுக்கு OAS விடைத்தாளில் , சரியான விடையின் எண்ணுள்ள ( 1, 2. 3 அல்லது 4 ) நீள்வட்டத்தை நிழலிடு |

" அ " பிரிவு

வேற்றுமை

1 முதல் 6 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து , அதன் பின்னர் , OAS விடைத்தாளில் , அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)

மீனவன் படகில் ஆழ்கடலுக்கு மீன் பிடிக்கச் சென்றான். அவன் படகை (1)______ சுமார் ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் நிறுத்தினான். அவன் (2)______ வலையை வீசிவிட்டுக் காத்திருந்தான். சற்று நேரம் கழித்து அவன் வலையை இழுக்கத் தொடங்கினான். அது (3)______ மாறாக அதிகக் கனமாயிருந்தது. மீனவன் , " வலை இவ்வளவு கனமாக உள்ளதே ! பெரிய மீன் மாட்டிக்கொண்டதோ ! " என்று எண்ணியவாறு வலையை விறுவிறுவென்று இழுத்தான்.

மீனவன் , வலையில் ஒரு பெரிய தங்கச்சங்கிலி மாட்டியிருப்பதைக் கண்டு வியந்தான். அவன் அதை (4)______ இழுத்தான். அந்த நீண்ட தங்கச் சங்கிலியை இழுக்க இழுக்க அவன் உடல் (5)______ நனைந்தது. தான் பெரிய பணக்காரனாகப் போகிறோம் என்ற ஆசை அவன் (6)______ தோன்றியதால் , அவன் தன் உடல் வேதனையைப் பொருட்படுத்தவில்லை. இறுதியில் அவனுடைய சிறிய படகு தங்கச் சங்கிலியால் நிறைந்துவிட்டது. பாரம் தாங்க முடியாமல் அது கடலில் மூழ்கத் தொடங்கியது.

1. (1) கரையின்
   (2) கரையை
   (3) கரையில்
   (4) கரையிலிருந்து ( )



www.testpapersfree.com

2. (1) தன்னுடைய
(2) தனக்கு
(3) தன்னால்
(4) தன்னிடம் ( )

3. (1) வழக்கத்தால்
(2) வழக்கத்தை
(3) வழக்கத்திற்கு
(4) வழக்கத்தில் ( )

4. (1) ஆவலால்
(2) ஆவலில்
(3) ஆவலோடு
(4) ஆவலை ( )

5. (1) வியர்வையால்
(2) வியர்வையை
(3) வியர்வையின்
(4) வியர்வையுடன் ( )

6. (1) மனத்திற்கு
(2) மனத்தில்
(3) மனத்துடன்
(4) மனத்தை ( )



153

www.testpapersfree.com

## செய்யுள் / பழமொழி

செய்யுள் / பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர் , OAS விடைத்தாளில் , அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)

7. உடையவன் ____________ வேலை ஒரு முழம் கட்டை.

(1) செய்யாத
(2) பாராத
(3) முடிக்காத
(4) சொல்லாத ( )

8. ____________ எல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு.

(1) அன்பிலார்
(2) பண்பிலார்
(3) அறிவிலார்
(4) ஒழுக்கமுடைய்ரர் ( )

9. எண்ணெழுத்து ____________ .

(1) விரும்பேல்
(2) இகழேல்
(3) விலக்கேல்
(4) கைவிடேல் ( )

10. ____________ அழகு கற்றுணர்ந்து அடங்கல்.

(1) உண்டிக்கு
(2) பெற்றோருக்கு
(3) அமைச்சருக்கு
(4) அறிஞர்க்கு ( )

154



www.testpapersfree.com

11. ஆழம் அறியாமல் ____________ இடாதே.

(1) கையை
(2)உள்ளே
(3)காலை
(4)வெளியே ( )

12. காலத்தினாற் செய்த __________ சிறிதெனினும் ஞாலத்தின் மாணப் பெரிது.

(1) உதவி
(2)செயல்
(3)நன்றி
(4)நன்மை ( )

<u>தெரிவுவிடைக் கருத்தறிதல்</u>

<u>பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படி</u>

முத்து தச்சு வேலையில் <u>கைதேர்ந்தவன்</u>. ஆயினும் அவன் வறுமையில் வாடினான். ஒரு சமயம் அவ்வூர் செல்வந்தர் தனது வேலையாளை அனுப்பி முத்துவை அழைத்து வரச் செய்தார். அவர் முத்துவிடம் மரத்தாலான மேசை , நாற்காலி , அலமாரி எனப் பல பொருள்களைச் செய்யச் சொன்னார். முத்துவும் செல்வந்தரின் மாளிகையில் ஒரு வாரம் தங்கி , அவர் சொன்னபடியே எல்லாவற்றையும் செய்து கொடுத்தான். முத்துவின் திறமையையும் உழைப்பையும் கண்டு அவர் மகிழ்ந்தார். அவர் அவனுக்குத் தரவேண்டிய கூலியுடன் விலை மதிப்புள்ள ஒரு வைரக் கல்லையும் பரிசாக வழங்கினார். இதைச் செல்வந்தரிடம் பணி புரிந்த வேலைக்காரி கவனித்தாள். அவள் உடனே தனது கணவன் பாபுவை அழைத்தாள். ஊருக்குத் திரும்பும் முத்துவை வழி மறித்து , அவனிடமுள்ள வைரக்கல்லைப் பறித்துக்கொண்டு வருமாறு பாபுவை வற்புறுத்தினாள்.

155



www.testpapersfree.com

முத்து காட்டு வழியாகத் தம் ஊருக்கு நடந்து போய்க்கொண்டிருந்தான். அங்கே வந்த பாபு , பாதையை மறித்து , " வைரக்கல்லைக் கொடுத்துவிடு. இல்லையேல் , உன்னைக் கொன்றுவிடுவேன் ! " என்று மிரட்டினான். முத்து திடுக்கிட்டான். உடனே அவன் வைரக் கல்லை வாய்க்குள் போட்டு விழுங்கிவிட்டான். " வைரக்கல்லா ! அது எங்கே ? " என்று ஒன்றும் தெரியாதவனைப் போல நடித்தான். " இப்போது விழுங்கினாயே ! அதை முதலில் கக்கிவிடு ! " என்றான் பாபு. இவர்களுக்கிடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இவர்கள் போட்ட இரைச்சலைக் கேட்டு முரடன் ஒருவன் அங்கு வந்தான். " நீங்கள் இருவருமே வைரக்கல்லைக் கக்கிவிடுங்கள் ! இல்லையேல் நான் உங்கள் இருவரையுமே கொன்றுவிடுவேன் ! " என்று கர்ஜித்தான்.

அப்போதுதான் பாபுவுக்குப் புத்தி வந்தது. மனைவியின் பேச்சைக் கேட்டதால் , தானும் முத்துவும் உயிர் இழக்கப் போகிறோமே என்று வருந்தினான். தான் இறந்தாலும் பரவாயில்லை. முத்துவின் உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்ற முடிவுக்கு வந்தான் பாபு. அவன் முரடனிடம் , " நாங்கள் இருவரும் நண்பர்கள். ஒருவரை ஒருவர் கேலி செய்து விளையாடினோம். நாங்கள் இருவரும் வைரக்கல்லை விழுங்கவில்லை. உனக்கு ஐயமிருந்தால் , என் வயிற்றைக் கிழித்துப் பார். அதில் இல்லாவிட்டால் , இவனும் விழுங்கவில்லை என்று நம்பு . இவனை விட்டுவிடு , " என்றான். முரடன் அவ்வாறே செய்தான். அவன் பாபுவின் வயிற்றைக் கிழித்துப் பார்த்தான். வைரக்கல் கிடைக்கவில்லை. ஏமாற்றத்துடன் முரடன் அந்த இடத்தைவிட்டு அகன்றான். முத்து உயிர் தப்பி வீடு வந்து சேர்ந்தான்.



156

www.testpapersfree.com

13 முதல் 17 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. <u>ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு.</u> அதன் பின்னர் , OAS விடைத்தாளில் , அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)

13. செல்வந்தர் முத்துவுக்கு எதற்காக வைரக்கல்லை வழங்கினார் ?

( 1 ) முத்து அவரிடம் அன்பாகப் பழகியதால்

( 2 ) முத்து குறைந்த விலையில் பொருள்களைச் செய்து தந்ததால்

( 3 ) முத்து திறமையுடன் பணியைச் செய்து முடித்ததால்

( 4 ) முத்து வறுமையில் வாடியதால்

14. பாபு ஏன் முத்துவைப் பின்தொடர்ந்தான் ?

( 1 ) முத்துவுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்கு

( 2 ) முத்துவிடமிருந்து வைரக்கல்லைத் திருடுவதற்கு

( 3 ) முத்து எங்கு வசிக்கிறான் என்பதை அறிந்துகொள்வதற்கு

( 4 ) முத்துவிடமுள்ள வைரக்கல்லை விலை பேசி வாங்குவதற்கு

15. முத்து ஏன் வைரக்கல்லை விழுங்கினான் ?

( 1 ) அவன் அதை இழக்க விரும்பாததால்

( 2 ) அவன் தன் பசியைப் போக்கிக்கொள்ள எண்ணியதால்

( 3 ) அவன் தன்னை ஆபத்திலிருந்து காத்துகொள்ள எண்ணியதால்

( 4 ) அவன் அதை செல்வந்தரிடம் ஒப்படைக்க விரும்பியதால்

16. பாபு எப்போது மனம் திருந்தினான் ?

( 1 ) முரடன் மிரட்டியபோது

( 2 ) முத்து அவனுடன் விவாதம் புரிந்தபோது

( 3 ) அவனது மனைவியின் பேச்சைக் கேட்டபோது

( 4 ) முத்து அவனுடன் நட்பு கொண்டபோது



157

www.testpapersfree.com

17. முரடன் ஏமாற்றமடையக் காரணம் என்ன ?

( 1 ) பாபு இறந்துவிட்டதால்

( 2 ) முத்துவிடம் வைரக்கல் இல்லாததால்

( 3 ) அவனால் வைரக்கல்லைக் கண்டுபிடிக்க முடியாததால்

( 4 ) அவனைப் பாபு ஏமாற்றிவிட்டதால்

சொற்பொருள்

18 முதல் 20 வரையுள்ள சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றவை. அவற்றின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர் , OAS விடைத்தாளில் , அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள்)

18. கைதேர்ந்தவன்

(1) திறமைசாலி

(2) அதிர்ஷ்டசாளி

(3) நேர்மையானவன்

(4) சுயநலக்காரன்

19. மிரட்டினான்

(1) திட்டினான்

(2) மன்றாடினான்

(3) பயமுறுத்தினான்

(4) உத்தரவிட்டான்

20. ஐயமிருந்தால்

(1) நினைவிருந்தால்

(2) சந்தேகமிருந்தால்

(3) நேரமிருந்தால்

(4) தைரியமிருந்தால்



www.testpapersfree.com

கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்

பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி :

# கண்ணகி உணவகம்



**அன்னையர் தினச் சிறப்புச் சலுகை !!**

கோழி , இறைச்சி , இறால் , மீன் பிரியாணி
வெறும் $ 8 * வெள்ளி மட்டுமே ! ( குளிர்பானத்துடன்)

- பகல் ( 12 முதல் 3 வரை மட்டுமே)
- குழுவில் குறைந்தது ஐவர் இருக்கவேண்டும்

சிங்கையில் சைவ , அசைவ உணவுக்குப் பெயர் போன கண்ணகி உணவகம் புதிய கிளையைப் ஜூரோங் பாய்ண்டில் மே 20 தேதி திறக்க உள்ளது

**வீடுகளுக்கு விநியோகம் செய்யும் சேவை !!**

கல்யாணம் ! பிறந்தநாள் விழா ! அன்னையர் தினம் ! புதுவீடு புகு விழா !

சற்றும் தயங்காதீர்கள் ! சிங்கப்பூரில் எல்லாப் பகுதிகளுக்கும் நாங்கள் சுடச் சுட மூன்று வேளையும் உணவு விநியோகம் செய்கிறோம். நீங்கள் எங்கள் இணையப்பக்கத்தில் ( www.kannagi.com) உங்களுக்கு விருப்பமான உணவைத் தேர்ந்தெடுங்கள் ! அல்லது அழையுங்கள் : தொலைபேசி எண் 61234565 ( 24 மணி நேரம்)

**விருந்து உபசரிப்பு நிகழ்ச்சிகள் !**


இரண்டு மாடிகள் கொண்ட விசாலமான எங்கள் உணவகத்தில் ஒரே சமயத்தில் ஐநூறு பேர் வரை அமர்ந்து உண்ணும் அளவுக்குக் குளிர் சாதன வசதி உண்டு. மேடை , அறிவிப்பாளர் , ஒலிபெருக்கிச் சாதனங்கள் அனைத்தையும் நாங்கள் வழங்குகிறோம் !!

- தோசை , நாண் வகைகள்
- இட்லி , பூரி
- பிரியாணி வகைகள்
- கடல் உணவு வகைகள்
- காய்கறி வகைகள்
- வட , தென்னிந்திய உணவு
- சீன முறையில் சமையல்
- இத்தாலிய பீஸா வகைகள்
- பலகாரங்கள்
- குளிர்பானம்

கண்ணகி உணவகம் : 11 , சிராங்கூன் சாலை
கிளைகள் : 2 , ஜூரோங் பாய்ண்ட்
13 , புக்கிட் தீமா சாலை









www.testpapersfree.com

21 முதல் 23 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர் , OAS விடைத்தாளில் , அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.
(6 மதிப்பெண்கள்)

21. இந்த விளம்பரத்தின் முக்கிய நோக்கம் யாது ?

(1) அன்னையர்களைச் சிறப்பிப்பது
(2) அன்னையர் தினத்தைக் கொண்டாடுவது
(3) வாடிக்கையாளர்களை ஈர்ப்பது
(4) பிரியாணி வகைகளை மக்களிடையே பிரபலப்படுத்துவது

22. அன்னையர் தினத்தன்று கண்ணகி உணவகத்தில் எட்டு வெள்ளி மட்டுமே தந்து பிரியாணி உண்ண விரும்பும் ஒருவர் என்ன செய்ய வேண்டும் ?

(1) அவர் தம் தாயாருடன் உணவகத்திற்கு வரவேண்டும்
(2) அவர் அன்னையர் தினத்தை அங்கு இரவில் கொண்டாடவேண்டும்
(3) அவர் பகலில் அங்குச் செல்லவேண்டும்
(4) பகலில் மேலும் நால்வருடன் அங்கு வரவேண்டும்

23. கண்ணகி உணவகத்தைப் பற்றிய தகவல்களுள் எது தவறானது ?

(1) கண்ணகி உணவகத்திற்குச் சிங்கையில் மேலும் இரு கிளைகள் உண்டு என்பது
(2) ஒரு நேரத்தில் ஐநூறு பேருக்கு மேல் அங்கு உண்ணலாம் என்பது
(3) ஒருவர் அங்குச் சீன முறையில் சமைத்த உணவை உண்ணலாம் என்பது
(4) ஒருவர் அதன் இணையப்பக்கத்திற்குச் சென்று அது வழங்கும் உணவுகளைப் பற்றி அறியலாம் என்பது

முற்றும்



160

www.testpapersfree.com

24 முதல் 41 வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை இந்தப் புத்தகத்தில் எழுது.

## " ஆ " பிரிவு

ஒலி வேறுபாட்டுச் சொற்கள்

கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குரிய பொருத்தமான சொற்களைத் தேர்ந்தெடுத்து அவற்றின் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (10 மதிப்பெண்கள்)

| | |
|---|---|
| 24. குமரன் ________ பாடங்களிலும் சிறப்பாகத் தேறினான். எனவே, அவனுக்குக் கல்வி உபகாரச் சம்பளம் வழங்கப்பட்டது. | 24.(  ) |
| 25. பருமனாகயிருந்த உஷா அளவோடு சாப்பிட்டு, தினமும் உடற்பயிற்சி செய்து வந்தாள். நாளடைவில் அவள் உடல் ________ காணப்பட்டாள். | 25.(  ) |
| 26. ரவி, " ஆசிரியர், இது என்னுடைய கடிகாரம் ________. நான் இதைத் திடலில் கண்டெடுத்தேன், " என்றான். ஆசிரியர் அவனுடைய நேர்மையை மெச்சினார். | 26.(  ) |
| 27. வேப்பிலைக்குச் சில நோய்களைப் போக்கும் ________ உண்டு. இதனால்தான் தமிழர்கள் இம்மரத்தை வளர்க்கிறார்கள். | 27.(  ) |
| 28. பொதுமக்கள் எலிகளின் தொல்லையைப் பற்றிப் புகார் செய்தார்கள். சுற்றுப்புற அதிகாரிகள் ________ வைத்து எலிகளைப் பிடித்தார்கள். | 28.(  ) |

1. பொரி
2. அல்ல
3. தண்மை
4. அனைத்து
5. இழைத்து
6. தன்மை
7. அணைத்து
8. இளைத்து
9. பொறி
10. அள்ள



161

www.testpapersfree.com

முன்னுணர்வுக் கருத்தறிதல்

கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற சொற்களைத் தேர்ந்தெடுத்து அவற்றின் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (14 மதிப்பெண்கள்)

| | |
|---|---|
| சுமதி தாயார் பரிமாறிய மதிய உணவை உண்ணத் தொடங்கினாள். அவள் முகத்தை (29)______ . அவள் " அம்மா , உணவு சுவையாக இல்லை, " என்று கூறி எழுந்தாள். அதற்குச் சுமதியின் அம்மா , " சரி , இரவு உணவை இதைவிடச் சுவையாகச் செய்ய (30)______ செய்கிறேன் , " என்றார். | 29.( ) <br> 30.( ) |
| அன்று பிற்பகல் சுமதியும் அவளுடைய தாயாரும் வீட்டைச் சுத்தப்படுத்தும் வேலையில் இறங்கினார்கள். இருவரும் அந்தி (31)______ வரை வேலையில் ஈடுபட்டார்கள். சுமதிக்கு மிகவும் (32)______ இருந்தது. அவள் சீக்கிரம் உணவைத் தயாரிக்கும்படித் தன் அம்மாவை (33)______ . அம்மா பரிமாறிய உணவைச் சுமதி , லபக் லபக்கென்று விழுங்கினாள். " அம்மா , இந்த உணவு மிகவும் ருசியாக இருக்கிறது . " என்றாள். அதைக் கேட்டு அவளுடைய அம்மா (34)______ . " நான் உனக்குப் பகலில் பரிமாறிய அதே உணவுதான் இது. நீ நன்றாக (35)______ களைத்திருக்கிறாய். பசி வேறு. எனவே , எந்த உணவும் ருசியாகத்தான் இருக்கும் , "என்றார். சுமதி அன்று சுவையின் இரகசியத்தை அறிந்துகொண்டாள். | 31.( ) <br> 32.( ) <br> 33.( ) <br> 34.( ) <br> 35.( ) |

| | | |
|---|---|---|
| 1. வேண்டினாள் | 5. முறைத்தார் | 9. பயிற்சி |
| 2. உதிக்கும் | 6. உற்சாகமாக | 10. சாயும் |
| 3. உழைத்து | 7. சீண்டினாள் | 11. களைப்பாக |
| 4. முயற்சி | 8. சுளித்தாள் | 12. புன்னகைத்தார் |



162

www.testpapersfree.com

சுயவிடைக் கருத்தறிதல்

பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படி

சுந்தர் ஓர் ஆப்பிள் பழத்தோட்டம் வைத்திருந்தான். அவனுடைய தோட்டத்திலுள்ள மரங்களில் நல்ல ருசியுள்ள பெரிய கனிகள் காய்த்தன. சுந்தர் தன் தேவைக்கு வேண்டிய பழங்களை வைத்துக் கொண்டான். எஞ்சியவற்றை விற்று நல்ல லாபம் ஈட்டினான். மேலும் தன் நண்பர்களுக்கும் அன்பளிப்பாக ஆப்பிள் பழங்களை வழங்கி வந்தான். சுந்தருக்கு கோபி என்ற பணக்கார நண்பன் ஒருவன் இருந்தான். கோபி அடிக்கடி சுந்தரின் வீட்டிற்கு வந்தான். அப்போது சுந்தர் ஆப்பிள் பழங்களைப் பறித்துக் கோபிக்குத் தந்தான். கோபி அவற்றை வயிராற உண்பதைக் கண்டு மகிழ்ந்தான். கோபி, அவற்றிலுள்ள ருசியைக் கண்டு தானும் ஓர் ஆப்பிள் மரத்தை வலர்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டான்.

ஒரு சமய சுந்தர், கோபிக்கு நல்ல ஆப்பிள் மரக்கன்று ஒன்றை அன்பளிப்பாகத் தந்தான். "நண்பனே, உன் வீட்டுத் தோட்டத்தில் இந்த ஆப்பிள் மரக்கன்றை நட்டு வைத்து, நன்றாகப் பராமரித்து வளர்த்து வா. உரிய காலத்தில் இந்தக் கன்று மரமாகி அருமையான ஆப்பிள் பழங்களைத் தரும்", என்று கூறினான். கோபி மகிழ்ச்சியுடன் அதைப் பெற்றுக்கொண்டு வீட்டிற்கு வந்தான்.

கோபி ஆப்பிள் கன்றை எங்கே நடுவது என்று தீவிரமாக யோசித்தான். ஆப்பிள் கன்றைச் சாலையோரத்தில் நட்டால், தெருவில் போவோர் வருவோர் மரத்தில் சாய்த்திருக்கும் பழங்களைப் பறித்துத் தின்றுவிட்டுச் செல்வார்கள். வீட்டுத் தோட்டத்தில் நடால், இரவில் அடுத்த வீட்டுக்காரன் பழங்கலைப் பறித்துச் சென்று விடுவான். வீட்டின் முன்புறம் நட்டால், சிறு பிள்ளைகள் பழங்களைப் பறித்துத் தின்று விடுவார்கள். இவ்வாறு யோசித்த கோபி, கன்றை யார் கண்ணிலும் படாத இடத்தில் நட வேண்டும்



163

www.testpapersfree.com

என்ற முடிவுக்கு வந்தான். வெயிலே தரையில் படாமல் மரங்கள் , செடி கொடிகள் படர்ந்திருந்த இடத்தில் கோபி ஆப்பிள் கன்றை நட்டான். அங்கே செடி இருப்பது யாருக்கும் தெரியாது. அதனால் , ஆப்பிள் பழத்திற்கு ஆபத்தில்லை என்று திருப்தி அடைந்தான். சூரிய ஒளி செடியின்மீது கொஞ்சங்கூடப் படாததால் , ஆப்பிள் கன்று விரைவில் பட்டுவிட்டது.

ஒரு மாதம் கடந்துவிட்டது. சுந்தர் கோபியின் வீட்டிற்கு வந்தான். தான் கொடுத்த ஆப்பிள் செடி எவ்வாறு வளர்ந்திருக்கிறது என்று அறிய சுந்தர் ஆவலோடு காத்திருந்தான். அதைப் பற்றிக் கோபியிடம் அவன் விசாரித்தான். " நீ என்னிடம் மோசமான செடியைக் கொடுத்துவிட்டாய் ! " என்று கோபி குறைப்பட்டுக்கொண்டான். கோபி அவனை அழைத்துக்கொண்டு போய் ஆப்பிள் கன்று நட்ட இடத்தைக் காண்பித்தான். சுந்தருக்குச் சிரிப்பதா அழுவதா என்று தெரியவில்லை. " இப்படிச் சூரிய ஒளியே படாத இருள் சூழ்ந்த இடத்தில் செடியை நட்டால் அது எப்படி வளரும் ? காற்றே வராத இருட்டறையில் உன்னைப் பல தினங்கள் அடைத்துப் போட்டால் , நீ செத்துப் போய் விடுவாய் அல்லவா ! செடியும் ஓர் உயிர் தானே ! ஆப்பிள் கன்று தானாகச் சாகவில்லை. நீதான் அதைக் கொன்றுவிட்டாய். உன் குறுகிய புத்தியின் காரணமாக இவ்வாறு செய்துவிட்டாய். பழம் என்பது எல்லோரும் உண்பதற்காகக் கடவுளால் படைக்கப்பட்டது. மற்றவர்கள் பழங்களைத் திருடாதவாறு நீ பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்திருக்கவேண்டும் , " என்று கூறி அவன் வருத்தப்பட்டான்.



www.testpapersfree.com

36 முதல் 41 வரை உள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது. (20 மதிப்பெண்கள்)

36. சுந்தர் தன் தோட்டத்தில் காய்த்த ஆப்பிள் கனிகளை என்ன செய்வான்? (4)

_______________

_______________

_______________

_______________

37. தானும் ஓர் ஆப்பிள் மரத்தை வளர்க்க வேண்டும் என்ற எண்ணம் எப்போது கோபிக்குத் தோன்றியது? (3)

_______________

_______________

_______________

_______________

38. சுந்தர் எதற்காகக் கோபியிடம் ஆப்பிள் மரக்கன்றைத் தந்தான்? (3)

_______________

_______________

_______________

_______________

39. வீட்டிற்குத் திரும்பிய கோபிக்கு ஏற்பட்டப் பிரச்சனை யாது? (4)

_______________

_______________

_______________



165

www.testpapersfree.com

40. "அதைப் பற்றிக் கோபியிடம் அவன் விசாரித்தான்." என்ற வாக்கியத்தில் "அதை" என்ற சொல் எதைக் குறிக்கிறது? (3)

41. ஆப்பிள் கன்று செழித்து வலரவும், அதன் கனிகள் திருட்டுப் போகாமல் இருக்கவும் கோபி என்ன செய்திருக்க வேண்டும்? (3)



166

www.testpapersfree.com

Primary - 5 SA - 1 Paper - 5

மீனவன் கடலில் ஆழ்கடலுக்கு........

1. 4 2. 1 3. 3 4. 3 5. 1 6. 2

7. 2 8. 1 9. 2 10. 4 11. 3 12. 3

13. 3 14. 2 15. 1 16. 1 17. 3

18. 4 19. 3 20. 2

21. 3 22. 4 23. 2

24. 4 25. 8 26. 2 27. 6 28. 9

29. 8 30. 4 31. 10 32. 11 33. 1 34. 12 35. 3

36. சுந்தர் ஆப்பிள்களில் சிலவற்றைத் தன் தேவைக்கு வைத்துக்கொண்டான். எஞ்சியவற்றை நல்ல விலைக்கு விற்றான். மீதமுள்ளவற்றை நண்பர்களுக்கு அன்பளிப்பாக வழங்கினான்.

37. அவன் சுந்தர் வழங்கிய ஆப்பிள் பழங்களை ருசித்துச் சாப்பிட்டபோது தானும் ஓர் ஆப்பிள் மரத்தை வளர்க்க வேண்டும் என்ற எண்ணம் அவனுக்குத் தோன்றியது.

38. சுந்தர், தன்னைப் போலத் தன் நண்பனும் ஆப்பிள் மரத்தை வளர்த்து அதில் காய்க்கும் கனிகளைப் பெற்றுப் பயனடைய வேண்டும் என்று விரும்பினான். அதற்காக அவன் கோபியிடம் ஆப்பிள் மரக்கன்றைத் தந்தான்.

39. கோபி ஆப்பிள் கன்றை எங்கு நடுவது என்று குழம்பிப் போனான். சாலையோரத்தில், வீட்டத் தோட்டத்திலோ, வீட்டின் முன் புறத்திலோ நட்டால் கனிகளை மற்றவர்கள் பறித்துச் சென்று விடுவார்கள் என்று அவன் பயந்தான். இதுவே வீட்டிற்குத் திரும்பிய கோபிக்கு ஏற்பட்டப் பிரச்சனை.

40. 'அதை' என்ற சொல், தான் வழங்கிய ஆப்பிள் கன்று எவ்வாறு உள்ளது என்று அறிந்து கொள்ளும் ஆவலைக் குறிக்கின்றது.

41. கோபி கன்றை சூரிய ஒளி படும் இடத்தில் நட்டிருக்க வேண்டும். மேலும் அம்மரத்தில் காய்க்கும் கனிகள் திருட்டுப் போகாமல் இருக்கப் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்திருக்க வேண்டும்.



www.testpapersfree.com